பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 18 (01-04-1998) புதன்கிழமை UTHAYAN - Lively National Tamil Daily கதிர்:107

01 APR 1998



## தமிழக அரசு திடீர் கலைப்பு!

## ஜெயலலிதா துணைப்பிரதமர்!!



புதுடில்லி, ஏப்ரல் 1

தமிழ் நாடு, இந்திய அரசியலை ஒட்டி இருபெரும் அதிர்ச்சி நடவடிக்கைகள் நேற்றிரவு புதுடில்லியில் எடுக்கப்பட்டன.

வாஜ்பாய் அரசின் கூட்டணிக் கட்சியான அ. தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா, வாஜ்பாய் அரசில் துணைப் பிரதமராக நியமிக்கப்பட்டார். அந்த நியமனம் பற்றிய அறிவிப்பு வெளியாகி — சற்று நேரத்தில் — இன்று அதிகாலை — தமிழ் நாட்டில் ஆளும் தி. மு. க. அரசு கலைக்கப்பட்டது பற்றிய அறிவிப்பை புதுடில்லியில் ராஷ்டபதி பவன் வெளியிட்டது.

புதிய துணைப் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள செல்வி ஜெயலலிதா நாளைமறுதினம் (வெள்ளிக்கிழமை) காலையில் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் முன்னிலை

(10ஆம் பக்கம் பார்க்க)

## தெகிவளையில் அதிகாலை

## பெரும் எடுப்பில் தேடுதல்!

## 1,500 தமிழர் கூட்டிச்செல்லப்பட்டனர்

கொழும்பு, ஏப்ரல் 1

நேற்று அதிகாலை 2. 00 மணி முதல் 5. 00 மணிவரை கொழும்பு தெகிவளை கடற்கரைப் பக்க பகுதிகளில் பெரும் எடுப்பில் சுற்றி வளைப்புத் தேடுதல் இடம் பெற்றது. நித்திரைப் பாயிலிருந்த 1,500 க்கும் அதிக தமிழர்கள் கூட்டிச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 37 பேர் மேல் விசாரணைக்காக பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

வீடுகளில் இருந்த தமிழர்கள் நித்திரை உடையுடன் ட்ரக்குகளில் ஏற்றப்பட்டு அத்திடியவில் உள்ள ஒரு பாடசாலை மைதானத்துக்கும், வெல்லவிட விகாரைக்கும் கூட்டிச் செல்லப்பட்டனர். அங்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் சந்தேகத்தின் பேரில் 37 பேர் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களில் 22 பேர் தெகிவளைப் பொலீஸிலும் 15 பேர் கல்கிசைப் பொலீஸிலும் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

(உ-3-8)

## செல்வா நூற்றாண்டு தினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 1

தந்தை செல்வாவின் நூற்றாண்டு ஜனன தினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தந்தை செல்வா நூற்றாண்டு விழாக் குழுவினரின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை செல்வா நினைவுத் தூபியில் — நாதஸ்வர இசையுடன்— நூற்றாண்டு விழா ஆரம்பமானது. இந்த விழாவில் தந்தை செல்வா சிலை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதகுருமார் கலந்து கொண்டு மங்கள விளக்கினை ஏற்றி வைத்து விழாவினை ஆரம்பித்து பிரார்த்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி கல்வி சமூகத்தினர் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

வவுனியா, ஏப். 1

வன்னியில் நடத்தப்படும் கண்மூடித்தனமான குண்டு வீச்சைக் கண்டித்து கிளிநொச்சியில் மாணவர்கள் ஆசிரியர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் முடிவடைந்தது. அங்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய், ஸ்ரீலங்கா ஜனாதிபதி மற்றும் ஐ. நா. மனித உரி

(9 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை கைவிடுவதற்கு ஐ.தே.க. முடிவு

கொழும்பு, ஏப். 1

ஐ. தே. கட்சி முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாகத் தெரிவித்து அதை ஆட்சேபிக்கும் விதத்தில் கடந்த ஒரு மாத காலமாக நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்த ஐ. தே. கட்சி அந்தப் பகிஷ்கரிப்பைக் கைவிட முடிவுசெய்துள்ளது.

ஐ. தே. க. நாடாளுமன்றக்குழுவும், கட்சியின் செயற்குழுவும் நேற்றுக்காலை கூடி இது தொடர்பாக ஆராய்ந்தது. எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் நாடாளுமன்றத்தின் அமர்வுகளில் பங்குபற்றுவது என்று அங்கு முடிவு செய்யப்பட்டது.

அதே நேரம் — முன்னாள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் மீது அரசாங்கம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அவரிடம் விளக்கம் கோருவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

### கிருஷாந்தி கொலை வழக்கு:

## தப்பிச் சென்ற கைதி சரணடைய விருப்பம்

கொழும்பு, ஏப்ரல். 1

கைதடியில் கொல்லப்பட்ட மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் மூவர் தொடர்பான கொலை வழக்கின் முதலாவது சந்தேக நபரான சோமரத்ன ராஜபக்ச சரணடைவதற்கு முன்வந்திருக்கிறார் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

நீதிமன்ற விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் அண்மையில் தப்பியோடிய இவர் தனது உயிருக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டால் சரணடைவதற்கு தயார் என்று மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகள் தமக்கு கொலைப் பயமுறுத்தல்களை விடுத்தார்கள் என்றும்—

(10ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் கிழக்கில் கிளைமோர் தாக்கு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

வலிகாமம் கிழக்குப் பகுதியில் நேற்றிரவு எட்டு மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்.

இத் தாக்குதல் பற்றிய மேலதிக விவரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை.

ஓரிடத்தில் கிளைமோர் தாக்குதல் நடத்துவதற்கு புலிகள் தயாராக இருப்பதாக யாரோ ஒருவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வாவுக்கு மன்னாரிலும் அஞ்சலி

மன்னார், ஏப், 1

தந்தை செல்வாவின் நூற்றாண்டையொட்டி மன்னார் நூலகம் முன்பாக நிர்மாணிக்கப்பட்ட தந்தை செல்வாவின் முழு அளவிலான சிலையை புளொட் அமைப்பின் உப - தலைவர் என். மாணிக்கதாசன் நேற்று மாலை 5 மணிக்கு திறந்து வைத்தார்.

இந்த வைபவத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தன், மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசப்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அ'புரத்தில் மரணமான

## குழந்தையின் சடலத்தை எடுத்துவர அனுமதிமறுப்பு

### அரச செலவில் அடக்கம்

வவுனியா, ஏப். 1

கடுமையாக நோய்வாய்ப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே இறந்துபோன தனது ஆறு மாதக் குழந்தையின் சடலத்தை எடுத்துவர வவுனியாவில் பாஸ் வழங்கப்படாததால் சடலத்தை அநாதரவாக விட்டுவிட்டு தாய் வன்னிக்கு திரும்பிச் செல்லவேண்டிய பரிதாபகரமான சம்பவம் ஒன்று வவுனியாவில் நடந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை 26 ஆம் திகதி பரப்பாங்கண்டலில் இருந்து கமலாவதி என்ற தாயார் சந்திரவதனி என்ற தனது 6 மாதக் குழந்தையைக் கூட்டிவந்து வவு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி இரு விமான சேவைகள்

கொழும்பு, ஏப். 1

இன்று தொடக்கம் கொழும்பு — யாழ்ப்பாணம் இடையே மொனரா விமான சேவை தினசரி இரண்டு தடவைகள் நடைபெறும் எனக் கொழும்புத் தகவல்கள் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## ஜேக்கப் றெஜீனா ஜெயசீலி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தற்காலிகமாக மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜேக்கப் றெஜீனா ஜெயசீலி மல்லாவியில் 29-03-1998 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் ஜேக்கப் (தெங்கு, பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுசங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், யூடித், காலஞ்சென்ற யூட் எடின் அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பிலிப் ஜோசப் (றோஸ் ஆட்ஸ் ஸ்ரூடியோ உரிமையாளர்) மற்றும் எலிசபெத் நல்லம்மா ஜோசப் அவர்களின் அன்பு மகளும், எடித், யஸ்மின், தீபன் ஆகியோரின் பெரிய தாயாரும், ஜெயராணி, ஜெயவதி, காலஞ்சென்ற தேவி மற்றும் பேனாட், விக்ரர், சோதி, அருட் சகோதரி லூசியா (திரு சிலுவை கன்னியர்), ஜெயக்குமார், ஜெயமலர், தாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிலிப் துரைராஜாவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஜோசப் விக்ரர் ஜெயராஜா
(சகோதரர்)

33/14 அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

(54483)

## கனகசபாபதி ஐயர் யாழரசன்

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியைச் சேர்ந்த கனகசபாபதி ஐயர் யாழரசன் 31-03-1998 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற கனகசபாபதி ஐயர் - தேவமணி ஆகியோரின் அருமைப் புதல்வனும், யசோதரன் (சங்கானை ப. நோ. கூ. சங்கம்), லதாமதி (விவசாயக் கந்தோர், திருமலை), சுரேந்திரசர்மா, கிரிதரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், சாந்தா யசோதரன் (ஆசிரியர், யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை), சுபத்திராதேவி, சுரேந்திரன் (ஆசிரியர், யா/சன்மார்க்க ம.வி.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-4-98) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 2 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. சுரேந்திரசர்மா
(சகோதரர்)

28, பிரப்பங்குளம் றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(54510)

## குமாரவேலு செல்லையா

(பாலசிங்கம்)
(இளைப்பாறிய அதிபர்)

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வட்டுக்கோட்டையில் வாழ்ந்தவருமான இளைப்பாறிய அதிபர் குமாரவேலு செல்லையா 30-03-98 இல் கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு - நாகரெத்தினம் தம்பதிகளின் ஏகபுத்திரரும், காலஞ்சென்ற ஆசிரியை ஞானசௌந்தரியின் அன்புக் கணவரும், கனடா கொன்கரி பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி ராஜலிங்கம், நியூசிலாந்து பொறியியலாளர் பரமலிங்கம், சரோஜினிதேவி, கொழும்பு யுனிக்கோ நிறுவன பிரதம கணக்காளர் பத்மலிங்கம், இலங்கை மின்சார சபை பொறியியலாளர் யுகராஜாலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

இறுதிக் கிரியைகள், இல. 45, கொலிஜ் வீதி, கொழும்பு - 15 இல் அமைந்துள்ள பத்மலிங்கத்தின் இல்லத்தில் (T P. ON: 341804) இன்று (1-4-98) இல் நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. வி. கந்தவேள்
(சகோதரன்)

18, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(54492)

அரியாலை

## மார்க்கண்டு கேதீஸ்வரன்

( பேபி )

பேபி என்று செல்லமாக அழைக்கப்படும் கேதீஸ்வரன் ( 31 — 03 — 1998 பிற்பகல் 5. 00 மணியளவில் இலங்கை நேரம் ) ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

இவர் அரியாலை அமரர் மார்க்கண்டு, யோகம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், ,செல்வராணியின் (ஜேர்மனி), அன்புக் கணவரும், நிமல், ரேகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரேஸ்வரன் (ஜேர்மனி), அழகேஸ்வரன் (ஜேர்மனி), லோகேஸ்வரன் (இ. மி. சபை - யாழ்ப்பாணம்), மகேஸ்வரன் (ஜேர்மனி), ரமேஸ்வரன் (கனடா), நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, புஸ்பமாலா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், நாகேந்திரம், அல்லிராணி, பவானி, அஜந்தா (நீதிமன்றம் — யாழ்ப்பாணம்), சந்திரபோஸ், பாமா, சச்சிதானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02- 04 -98 ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. லோகேஸ்வரன்
( சகோதரன் )
உரிமையாளர்
அஜந்தா போட்டே &வீடியோ
நல்லூர்.

19. மலர்மகள் வீதி,
அரியாலை.

( 54514 )

## தபால்கள் வந்தன

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 91 தபாற் பொதிகள் நேற்று செவ்வாய் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

தபால்களைத் தரம்பிரித்து விநியோகிக்கும் பணிகள் இன்று புதன் ஆரம்பமாகும்.

இதேவேளை யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 18 தபாற் பொதிகள் நேற்றைய தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

## கால் இழப்பு

வளவொன்றைத் துப்புரவு செய்யும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு இடதுகால் முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

குப்பிளான் தெற்கில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுன்னாகம் மயிலங்காட்டைச் சேர்ந்த டானியல் சாந்தரூபன் (21 வயது) என்பவரே கால் இழந்தார். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-15-139)


Paper Class (79-97)

PHYSICS

Mr. ஸ்பெல்மன்

ஆரம்பம்:- 2 - 4 - 98
செவ்., வியா. 6-15 a. m.

SHAMROCK

(54497)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
வியாழன் வரை
ரஜனி - ஸ்ரீபிரியா
சுமன் நடித்த
'தீ'
நேரம்:- 10-30, 2-30
வெள்ளி முதல் சனி வரை
காலை 10-30
எம்.ஜி.ஆர். நடித்த
படகோட்டி
மாலை 2-30
மதுரையை மீட்ட
சுந்தரபாண்டியன்
தொலை பேசி இல.
070 - 212223
(54347)



யாழ்.
றீகல் வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
கமல் - அர்ஜுன்
நாசர் - கௌதமி
நடித்த
குருதிப் புனல்
அடுத்த வெளியீடு
உள்ளத்தை
அள்ளித் தா
தினசரி:- 10-30, 2-30
தொ.பே.இ. 021 - 2999
(54512)



நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
31 - 03 - 98 முதல்
விக்னேஷ் - தேவயானி
நடித்த
காதலி
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)


# யாழ்ப்பாணத்தில் சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 1

சிங்களத் — தமிழ் புதுவருடத்தை ஒட்டி ஸ்ரீ லங்கா சைக்கிளோட்ட சம்மேளனத்தின் கண்காணிப்பில் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஐந்தாம் திகதி சைக்கிளோட்டப் போட்டி ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.

யாழ். படைத் தலைமையகத்தின் ஒத்துழைப்போடு இந்த சைக்கிளோட்டப் போட்டி நடைபெறும் என்று ஸ்ரீலங்கா சைக்கிளோட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது. இப்போட்டி தொடர்பான விரவங்களையும் சம்மேளனம் அறிவித்துள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:

★ ஆண்கள் பிரிவுக்கான போட்டி 35 கிலோ மீற்றர் தூரத்தையும் பெண்கள் பிரிவுக்கான போட்டி 15 கிலோ மீற்றர் தூரத்தையும் கொண்டதாக இருக்கும்.

★ 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.

★ 28 அங்குலம் அல்லது 26 அங்குல சக்கரங்களைக் கொண்ட — ஆண்களுக்கான அல்லது பெண்களுக்கான சாதாரண சைக்கிள்களைப் பயன்படுத்த முடியும்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

நீதி உயர்ந்த மதி கல்வி, அன்பு நிறைவுடைய கல்வி அதிபதி

### அமரர் சு. இரத்தினராசா

அவர்களின் பிரிவு குறித்து வருந்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(54503)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

(கல்விப் பணிப்பாளர் - வலயம் 01)

உடுவில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவிருந்து எமக்கெல்லாம் வழிகாட்டி, உயர்வுக்கு வழிவகுத்து, சகலரையும் சமனாக நோக்கிய தலைவரின் திடீர் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கண்ணீர்ப் பூக்களாகச் சமர்ப்பிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/இணுவில் மத்திய கல்லூரி.

(50013)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவரும்,
முன்னாள் ஆசிரியரும்,
யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளருமான

### அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கின்றோம். எம் மண்ணின் மைந்தனின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.
யா/சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.வி.
வேலணை.

(54503)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் - 1 இன் கல்விப் பணிப்பாளராகிய

### அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்கள் 30 — 3 — 98 திங்கட்கிழமை காலமானதையிட்டு நாம் அதிர்ச்சி அடைவதுடன், ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம். அன்னாரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி ச. சண்முகராஜா
( காப்புறுதி அமைப்பாளர், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் )

இல. 167/1, கோயில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

( சி/3274 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டிய மலர்

**(01 - 04 - 1998)**

## பிரதம சிவாச்சாரியாரின் அருளுரை

புராதன சக்தி பீடங்களில் தலைமை பொருந்தியது நயினை புவனேஸ்வரி பீடம். திருவருள் செய்யும் அம்பாளுக்கு இன்று அனைவரது முயற்சியினாலும் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. இச் சிறப்பினைக் காண்போர் விரும்பிய அனைத்தும் பெறுவார்கள். பொருளுதவி செய்தோர் பெறும் புண்ணியம் கோடிபெறும்.

*பிரதிஷ்டா கிரியா கலாபமணி,*
*சிவாகம கலாநிதி*
*வட கோவை மு. பரமசாமிக்குருக்கள்.*

## சிவ சக்தி ரூபமானவள்

தேவர்களால் வழிபட்ட தலம் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் கோயில். சிவசக்தி ருபமான நாகம்மாளுக்கு இன்று குடமுழுக்கு நடைபெறுகின்றது. சிறப்பும், கீர்த்தியும், அற்புதமான சக்தியும் மிக்க அம்பாளை வணங்கி எல்லாம் பெறுக இன்புற்று.

*நா. வி. மு. நவரெத்தினம்*
*முது தத்துவமானி,*
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

## நயினை நாகராஜேஸ்வரி

அறுபத்தினான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடமாக அமைவது நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம். கர்ப்பக்கிரகத்திலுள்ள ஐந்து தலை நாகம் சுயமாகத் தோன்றியதாகும். நாகர்கள், திராவிடர்களின் வழிபாட்டுத் தெய்வமாக நாகராஜேஸ்வரி விளங்கி உள்ளாள். நாக சர்ப்பத்தினாலும் பூசிக்கப் பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. நாமும் இந்நன்னாளில் அவளின் திருப்பாதங்களை வழுத்துவோமாக.

*நயினை நாகமணிகோபாலகிருஸ்ணன்,*
*தலைவர்,*
*சப்த தீவக திவ்விய ஜீவக சங்க சமாஜம்.*

### துதி

கற்பகக் கன்றைக் கடம்பனைத் தந்த கனகவரை
அற்புதமோன அருளாழி ஞான அமிர்த வல்லி
தற்பரை வாமம் தழைத்தே சரம சராதிதரு
நற்பதியே எனைப் பெற்ற சதானந்த நாகம்மையே.



சோடுற்ற நவரெத்ன கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகில லாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ்சுட்டியும்மலர்க்கையால்
தொட்டிட்ட சிந்நூரமும்
தோடுற்ற கொத்தழகு மரகதக் கொப்புமார்
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவள வாய்
துவரு மொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருவுருவு மறிவினாலே
தெரிசிக்க வருடத்து நீடாயுளும் பெருஞ்
செல்வமுந் தர வேண்டும் நீ
நாடுற்ற பலவளமு முறையுமெழில்
நயினா நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

## தலைவரின் ஆசிச் செய்தி

அண்டசராசரங்களையும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையினால் உற்பவித்தவள் அன்னை பராசக்தி. கும்பாபிஷேக விழாவிலே அந்தப் பஞ்ச பூதங்களை ஒருங்கிணைத்து கும்பத்திலே எழுந்தருளச் செய்து பிம்பத்திலே சாந்நித்தியப் படுத்துவதாக அமைவதுஇப்பெருஞ்சாந்தி விழாஇப் பெருஞ் சாந்தி விழாவைக் காணாத கண் என்ன கண்ணோ?

மகாகும்பாபிஷேகத்திற்கு வரும் அடியார்களுக்கு சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கஅறங்காவலர் சபையினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நாட்டில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட எம்பிராட்டியை இறைஞ்சுகின்றேன்.

*ஆ, தியாகராஜா*
*தலைவர்- அறங்காவலர் சபை,*
*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்*

## அறங்காவலர்கள்

மகாகும்பாபிஷேகம் காண அயராது உழைத்த அறங்காவலர்கள்

திருமிகு ஆ. தியாகராஜா – தலைவர்
,, வ. சபாரெட்ணம் – செயலாளர்
,, வி. சபாநாதன்
,, நா. நட்ராசா – பொருளாளர்
,, இ. பரராஜசிங்கம்
,, க. மகாலிங்கசிவம்
,, நா. சண்முகநாதன்
,, ச. தருமராசா
,, நா. இராதாகிருஷ்ணன்
,, நா. விசுவநாதன் (முன்னாள் செயலாளர்)
,, க. பொ. கி. குலசிங்கம் (முன்னாள் அறங்காவலர்)

இதழ் ஒழுங்கமைப்பு
**கு. சரவணபவானந்தன்**
*[பி.ஏ. பட்டப்பின் கல்வி டிப்ளோமா]*


மகா கும்பாபிஷேக நாளில் அன்னையின் அருளாசி அகிலமெங்கும் கிடைக்கப் பிரார்த்திப்போர்:

''பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே..................''

**நியூகமால் செரமிக்** 37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

வி. எஸ். பி. குறூப்
266 ஏ, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

அம்பிகா நகைமாளிகை
122, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

அருள் விநாயகர்
103, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

நியூ பிரியங்கா நகை மாளிகை
177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
4 ஏ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தேவகி களஞ்சியம்
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏ. எஸ். ஆறுமுகம் அன் சன்ஸ்
81, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

சுமங்கலி ஜுவலர்ஸ்
118ஏ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யோ. சிவரஞ்சன்
45, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்
வங்களாவடி, நயினாதீவு, - வவுனியா.

லிங்கன் கிறீம் ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மல்லாகம் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

01-04-1998

## மாவை ஆதீனகர்த்தா அவர்களின் பிரார்த்தனை

அழிதற்கேற்ற காலமும் அம்மார்க்கத்தின் சார்பான புத்தியும் மேலோங்கும் போது சாதுக்கள் எதிர்வார்த்தைகள் பேசாது இதமாகப் பேசி அடங்கி விடுவர். தக்கயாகத்திலும் மேற் கூறியவை நன்கு பொருந்தியிருந்தன. இக்காலங்களிற் கூட புதுப்புதுப் பரம்பலில் தக்கப் பிரஜாபதிகள் தமக்கு மேலான தெய்வமேதுமில்லை என்ற மனப்பான்மையோடு பவனிவரும் காலகட்டத்தில் பத்திரகாளி சமேத வீரபத்திரக் கடவுள்ஆலய புனராவர்த்தன சம்புரோக்ஷண கும்பாபிஷேகங்கள் நடைபெறுவதைக் காணும் போது நல்லவர்களது வாழ்வு சுறுசுறுப்போடு மேலோங்கவும் தீயவர்களது வாழ்வு ஆதாயிகளின் நிலையில் வளர்ந்து அடியோடு சாயவும் வழி செய்யுமென்பது திண்ணம்,

மல்லாகம் மக்கள் அருமையான செயலைச் செய்து ஆத்மீக வளர்ச்சியினூடாகச் சைவநீதியை நிலைபெறச் செய்யும் இத்தகைய சில தர்மங்கள் மேலும் மேலும் ஆற்ற அவர்களுக்கு எல்லாம் வல்லபார்வதி பரமேஸ்வரன் அபரிமிதமான ஐஸ்வர்யங்களை வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். தக்கனை தடிந்திடும் சேவகன் சரணங்களை நாமனைவரும் போற்றுர்வாமாக.

மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனகர்த்தா,

## ஆலய சிவாச்சாரியாரின் ஆசி

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் வீரபத்திரர் சுவாமிகள் சிறப்பாக வீற்றிருக்கும் அருட் தலம் மல்லாகம் வீரபத்திரர் திருத்தலம். இப்புண்ணிய திருத்தலத்தில் நித்திய பூசகராக அரும்பணியாற்றுவதற்கு இறைவன் திருவருள் எனக்குக்கிடைத்ததையிட்டு அகமகிழ்கின்றேன்.

அற்புதங்கள் நிறைந்தஇப்பழமைமிக்க திருத்தலத்தை இக்கிராமத்து மக்கள் தம் உயிர்நாடியாகப் போற்றிப் பேணிவருகிறார்கள்.

இவ்வாண்டு ஆலய புனர்நிர்மாணப் பணிகளை நிறைவு செய்து, மகாகுடமுழுக்கு ஏற்பாடு செய்து இருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. இப்புண்ணிய கும்பாபிஷேக வைபவத்தோடு மல்லாகம் கிராமமும், மக்களும் நல்லருள் பெற்று நன்றே சிறக்க வீரபத்திரரைப் பிரார்த்தித்து நல்லாசி வழங்குகின்றேன்.

—நடன சபாபதி சர்மா

## திருப்பணிச் சபை பொருளாளரின் செய்தி

மல்லாகம் கிராமத்து மக்களின் மகிமை தரு திருத்தலம் வீரபத்திரசுவாமி கோயில் பழம் பிள்ளையாரும், நீலியம் பனைப் பிள்ளையாரும், ஐயனாரும் கிராமத்தின் திருப்பொலிவுக்கு எல்லைகளில் நின்று அருள்பாலித்த வண்ணமுள்ளனர்.

வீரபத்திரர் எமது கிராமத்தின் மத்திய பகுதியில் வீற்றிருந்து எல்லா மக்களினதும்இஷ்ட தெய்வமாக விளங்குகின்றார். அவரது அற்புதத் திருவிளையாடல்களை அற்புதங்களை எமது முன்னோர் சொல்லிச் சொல்லி பரவசமுறுவர். சிறு குடிசை போன்ற அமைப்பில் இருந்த ஆலயம் இன்று பெருங்கோயிலாக வளர்வதைக் கண்டு அனைவரும் மனம் மகிழ்ந்து துதிக்கின்றனர்.

இக் கிராமத்துச் சிறுவர்கள் கூட்டு வழிபாடு ஆற்றுவதும், திருமுறைகள் ஓதுவதும் பக்திபாரம்பரியங்களை வளர்ப்பதும் இத் திருத்தலத்து மரபாக நடைபெற்று வருகிறது. பேரருட்சிறப்புமிக்கஇப் புண்ணிய தலம் மேலும் மேலும் வளர வீரபத்திரரை வேண்டுதல் செய்து திருப்பணிக்கு உதவிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

வைத்திய கலாநிதி ஆ. சிவபாதம்

## வீரபத்திரர் மகிமை

சிவநிந்தனை செய்தவர்களைத் தண்டிக்கவும், அறியாமையில் அல்லற்படுபவர்களை மீட்கவும் சிவப்பரம்பொருள் எடுத்த வடிவமே வீரபத்திர வடிவமாகும்.

ஆணவத்தினால் அகந்தை கொண்டு தனக்கு மேற்பட்டவர்களை, தன் நல்வாழ்வுக்கு காரணமாக இருந்தவர்களை மறந்து அலட்சிய வாழ்வு வாழ்ந்தான் தக்கன். தக்கனது தவறான வாழ்வைத் தண்டிப்பதோடு, தவறானவனான தக்கனுக்கு உடந்தையானவர்களையும் தர்ம வாழ்வுக்குத் திருப்ப சிவன் திருவுளங் கொண்டார்.

அவ்வேளை அகோர வடிவினராக உதித்து தீது அகன்று உலகம் உய்ய வீரபத்திரத் திருவடிவத்தை ஏற்றார். தேவர்கள் முதல் சூரிய — சந்திரர் வரை வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டு புனிதம் பெற்றார்கள் என்பது கந்த புராண வரலாறு.

தீமைகள் எம்மை அணுகாமல் இருப்பதற்காக திருக் கோயில் கட்டி வழிபாடு செய்யும் சைவ மக்கள், வீரபத்திரர் சுவாமிகளுக்கும் கோயில் கட்டி வழிபாடு ஆற்றுவது மரபு. அவ்வகையில் இன்று நடைபெறும் மல்லாகம் என்னும் திருவூரின் காவற்தெய்வமாக விளங்கும் வீரபத்திரர் கோயில் மகாகும்பாபிஷேகவிழா மகத்தானது.

வீரபத்திரரின் திருவருட் பொலிவை வியாபித்து அறம் காக்க இத்திருநாள் கைகூடியுள்ளது.

இன்று மனிதர்களிடையே தர்ம சிந்தனைகள் தடுமாறிக் கொண்டு இருக்கின்றன. ஆணவத்தால் அகந்தை கொண்டு அர்த்தமற்ற வாழ்நாளை மனிதர்கள் மேற்கொள்ளாது அவர்களைக் காப்பதற்கு ஆலயங்கள் எழுச்சி பெறவேண்டும். தீய வழிக்குச் செல்பவரை தெய்வங்கள் தான் நல்வழிப்படுத்தும். தெய்வ வழிபாட்டை ஓங்கச் செய்ய ஒவ்வொரு சைவ சமயத்தவரும் பிரார்த்தனை செய்வோமாக!

- ஆறு. திருமுருகன்

## திருப்பணிச் சபை தலைவரின் வாழ்த்துச் செய்தி

''என்கடன் பணி செய்து கிடப்பதே...'' என்ற அப்பர் சுவாமிகளின் அருள் வாக்குக்கு அமைய எனது மூதாதையரால் ஸ்தாபிக்கப்பட்டு எனது தந்தையாரான வைத்தியர் முத்துக்குமாரு கந்தையா அவர்களினால் 1939 ஆம் ஆண்டு முதலாவது குடமுழுக்குச் செய்யப்பட்டு வளர்த்த திருஆலயம் மல்லாகம் வீரபத்திரசுவாமி கோயில்.

இத்திருத்தலத்தைப் பேணிக் காப்பதில் எமது கிராமத்து அடியவர்கள் பலர் எனக்குப் பெருந்துணை செய்தார்கள். காலத்துக்குக் காலம் பல்வேறு திருப்பணிகள் நிறைவு பெற்று இன்று பெருந்தலமாக இவ்வாலயம் வளர்ச்சி பெற்று வருகிறது.

நாவல் விருட்சத்தில் இருந்து தன்னை நாடி வருபவர்களுக்கு நன்மை செய்யும் எம் குல தெய்வத்தை குறையில்லாது திருப்பணிகள் தொடர்ந்து செய்து அடியவர்கள் காத்து வருகிறார்கள். புனர் நிர்மாண மகாகும்பாபிஷேக ஏற்பாடுகளுக்கு பெரிதும் ஊக்கம் கொடுத்து உதவினர்.

இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேக வைபவத்தோடு எம் கிராமம் மீண்டும் திருப்பொலிவு பெற்று சிறக்கும் என்பது எனதுநம்பிக்கை. எம் பரம்பொருளாகிய வீரபத்திரசுவாமிகளின் திருவருள் எங்கும் சிறக்க வேண்டி அமைகின்றேன்.

M.K .தவராஜா
(இளைப்பாறிய ஆசிரியர்)

## முத்தியிலே ஆன்மாவும் சிவனே!

இந்தனத்தி னங்கி எரியுறுநீர் தேனிரதம்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண் - சந்ததமும்
அத்துவித மாவதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும் முறை.

— சிவபோகசாரம்.

முத்தியிடத்துப் பாசம் இல்லையாக, ஆன்மாவும் சிவனுமேயாய் நிற்கின்ற முறை — விறகும் தீயும், வெந்நீரும் சூடும், தேனும் தித்திப்பும், மலரும் மணமும், ஆகாயமும் காற்றும், கண்ணும் கதிரொளியும் எஞ்ஞான்றும் வேறற நிற்றல் போல்வதாம்.

## துர்க்காதுரந்தரியின் வாழ்த்து

திருக்கோயில்களினால் சிறப்புப் பெற்ற ஒரு கிராமம் மல்லாகமாகும். இங்கு பெரியனவும் சிறியனவுமான முப்பதுக்கு மேற்பட்ட சைவத்திருக்கோயில்கள் காட்சி தருகின்றன. இவற்றுள் ஒன்றான கண்ணியமான பெருமக்கள் சூழ்ந்து வாழ்கின்ற இடமே வீரபத்திரர் கோயில் அமைந்த இடமாகும். நித்திய நைமித்தியங்கள் மிக ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெறுகின்ற ஆலயம் இதுவாகும்.

இறைவனுடைய மூர்த்தங்களில் அசுரகனைத் தண்டித்து, அநீதியை விலக்கி தெய்வநீதியை நிலைநாட்டிய மூர்த்தமாகக் கந்தபுராணத்தில் வீரபத்திர மூர்த்தம் குறிப்பிடப்படுகிறது. அல்லவை நீங்கவும், நல்லவை பெருகவும் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டிய காலம் இதுவாகும். எனவே இக்காலத்தில் வீரபத்திர வழிபாடு இன்றியமையாததொன்றாகும்.

மல்லாகத்தில் நல்லடியார் ஒன்றுபட்டு இக்கோயிலைப் புனருத்தாரணம் செய்து குடமுழுக்கு விழா காண்பது குறித்து நான் பேரானந்தம் அடைகிறேன். இருபது ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயில் முகப்பில் நின்று உரையாற்றிய அனுபவத்தை இன்று மீட்டுக் கொள்கின்றேன். எம்பெருமான் வீரபத்திரர் அனைவருக்கும் அருள்பாலிப்பாராக.

வணக்கம்!

துர்க்காதுரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்.
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## திருப்பணிச் சபைச் செயலாளரின் செய்தி

ஆன்மிகச் சிறப்பும், கல்விச் சிறப்பும், பொருள் வளம் மற்றும் சிறப்புக்கள் மிக்க புண்ணிய பதி மல்லாகம். இப் புனிதத்திருவூரை நல்லறங்களால் காப்பதில் எங்கள் வீரபத்திரர் ஆலயமும் முதன்மை பெறுகின்றது.

இவ்வாலயம் இயற்கை அழகுடைய பாரிய விருட்சங்களின் நிழலில் வீற்றிருந்து எம் துன்ப வினைகளைத் தீர்க்கும் பேரருட் சக்தியாக விளங்குகின்றது. எவர்வேண்டுதல்களையும் பூர்த்தி செய்யும் பத்திரகாளி சமேத வீரபத்திரர் சுவாமிகளின் அற்புதங்கள் எண்ணற்றவை.

எம்பெருமானுக்கு நித்திய பூசைகளுடன் பங்குனியில் விசேட அலங்கார உற்சவமும், சங்காபிஷேகமும் இடம் பெறுவது வழமை. இத்திருத்தலத்தில் திருப்பணிவேலைகள் பல நிறைவுற்று பதினாறு ஆண்டுகளுக்குப் பின்பு இன்று புனருத்தாரண மகாகும்பாபிஷேக வைபவம் நிகழ்கின்றது.

இவ்வாலய புனர்நிர்மாணப் பணிகளுக்கு பேராதரவு தந்து உதவிய அடியவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். எல்லோருக்கும் அருள்பாலிக்க எம்பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

வ. நந்தீஸ்வரன்
[ஆசிரியர்]

## சிவபெருமானின் குணங்கள்

சூலம் - முக்குணம்: பரசு - சத்தியம் [உண்மை]; கடகம் [வாள்] - பேராண்மை; வஜ்ரம் - [முழுமை] பிரிக்க இயலாதது; அபயம் - பேருளுடைமை; நாகம் - பாசங்களிலிருந்து நீங்கிய தன்மை; பாசம் - மாயை வடிவம்; அங்குசம் - நிறமின்மை; மணி - நாதமயம் [ஒலி வடிவு]; அக்கினி - ஒடுக்கம்.

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,
235, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பெஷன் ஹவுஸ்,
65, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

கோயில் ஸ்தூபிகள் கொடிமரம் சிறந்த முறையில் பிளேற்றிங் செய்து கொள்ள நாடவும்:
பத்திராபதி எலக்ரோ பிளேற்றர்ஸ் அன்ட் மெற்றல், இன்டஸ்றீஸ், யாழ்.

தரமான போட்டோ பிரதிகள், கவரிடுதல் வேலைகளுக்கு
[illegible]
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

தங்க, வைர நகைகளுக்கு
அருள் முருகன், சாரங்கா நகை மாடங்கள்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வாலாம்பிகை சிற்பாலயம்,
90, சிவன் கோயில் வடக்கு,
யாழ்ப்பாணம்.

விளம்பர இல. (54550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி


**அமரர் சு. இரத்தினராசா**
அவர்கள்

யாழ். கல்வி வலயம் 01 இன் கல்விப்பணிப்பாளர்
அமரர் சு. இரத்தினராசா
அவர்களது திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோட்டக்கல்வி அலுவலர்,
உத்தியோகத்தர்கள்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
தெல்லிப்பழை.

(சி-3265)

## ஓராண்டு நினைவஞ்சலி



**சின்னராசா குமரேசன்** [ராசன்]

தோற்றம்: 30 — 05 — 1979
மறைவு: 12 — 04 — 1997


ஓராண்டாய் ஆறாத் துயரில்
எம்மை ஆழ்த்தி விட்டு
ஆழ்ந்த துயில் கொள்ளும் அன்புச் செல்வமே!
ஆண்டு ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டுகள் தான்
சென்றாலும் ஆறாது எம் துயரையா!

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

நாச்சிமார் கோயிலடி,
கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

(54485)

## 1-ம் ஆண்டு -- 12-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வேதமாணிக்கம் சாமுவேல்**
மலர்வு: 10—05—1922
உதிர்வு: 01—04—1997

**சாமுவேல் குஞ்சி**
மலர்வு; 05—02—1929
உதிர்வு; 02—04—1986

ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடி நிற்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
ச. செபஸ்தியம்மா,
பாலசிங்கம் விடுதி,
கொக்குவில்.

(54482)

# மீன்பிடிக்கும் நேரம், தூரத்தை அதிகரிக்க பாதுகாப்பு தரப்பு இணக்கம்

## புனர்வாழ்வு சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 01

யாழ். குடாநாட்டில் வடக்குப்பகுதி கடல் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மீன் பிடிக்கும் நேரம், தூரம் ஆகியவற்றை அதிகரிக்க பாதுகாப்பு தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு யாழ். வந்த வட மாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என். ஏ. ஒபடகே தெரிவித்தார்

யாழ். குடாநாட்டில் உள்ள மீனவர்களின் மீன் பிடிக்கும் நேரத்தை, தூரத்தை அதிகரிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகள் எம்மிடம் கோரினர்.

இது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினோம்.

குடாநாட்டின் வடக்குப் பகுதி கடலில் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக மாற்றம் செய்ய முடியாதுள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். அந்தப் பகுதியில் தற்சமயம் நடைமுறையில் இருப்பதே தொடர்ந்தும் இருக்கும்.

ஆனால் ஏனைய பகுதிகளில் மீன் பிடிக்கும் நேரத்தை அதிகரிக்கவும், நடுக்கடல் வரை சென்று மீன் பிடிக்கவும் அனுமதி அளிப்பதாக பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

அதேநேரம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 500 ரூபாவுக்குள் வருமானம் பெறுபவர்களுக்குஇலவச உலர் உணவு வழங்க ஜனாதிபதி அங்கீகாரம் தந்துள்ளார். அத்துடன்சமுர்த்தி நிவாரண உதவிகளும் அவர்களுக்கு வழங்கப்படும்.

அவர்களுக்கு வலைகள், படகுகள் கிடைக்க வசதி செய்யும் பொருட்டு சீநோர் நிறுவனம் உட்பட பல நிறுவனங்களை மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது — என்றார் அவர்.

(இ-3)

## வாகனவரி பத்திரம்

யாழ்ப்பாணம், ஏப். 1

பிரதேச செயலகங்களில் இந்த வருடத்துக்கான வாகனவரிப் பத்திரங்களை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்த வருடத்துக்கான வாகனவரி செலுத்தியவர்கள் அதற்குரிய பற்றுச் சீட்டுக்களை பிரதேச செயலகங்களில் சமர்ப்பித்து தமக்குரிய வாகன வரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளளாம்.

இதேவேளை யாழ். பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் வாகன வரிப்பத்திரங்களை விநியோகிக்கும் பணிகள் இன்று புதன்கிழமை தொடக்கம் இடம்பெறவுள்ளதாக பிரதேச செயலகங்களின் கணக்காளர்கள் அறிவித்துள்ளார்கள். (இ-7)

## தேசிய ஆங்கில மன்றம்

சுன்னாகம். ஏப்1,

வடமராட்சியை மையமாகக் கொண்டு பருத்தித்துறையில் தேசிய ஆங்கில மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் உதவி அரச அதிபர் முருகேசபிள்ளையைத் தலைவராகக் கொண்ட இந்த அமைப்பு, பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஆங்கில அறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுமென இதன் பொருளாளர் இராசேந்திர சேகரசர்மா தெரிவித்தார்.

ஒவ்வொரு போயாதினத்திலும் இவ்வமைப்பு பாடசாலை மாணவர்களின் ஆங்கில நிகழ்ச்சிகளை மேடையேற்றி வருகிறது.

(ஐ-27)

## முக்கிய அறிவித்தல்

1998 தை, மாசி மாதங்களில் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் (Film Rolls) யாவும் பிரதியாக்கம் (Printing) செய்து வந்து விட்டன. இன்று 01/04/98 இல் படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

★ பாதுகாப்புப்படையினரின் அனுமதி வழங்கலில் ஏற்பட்ட கால தாமதத்துக்கு வருந்துகின்றோம்.

★ 16/4/98 அளவில் படச்சுருள்கள் (Film Rolls) அனுப்ப உத்தேசித்துள்ளோம்.

**ஸ்ரீ வல்லிபுர போட்டோ**
( சந்திரன் )
புலோலி தெற்கு, புலோலி,
பருத்தித்துறை.
(கிராமக்கோட்டுச்சந்தியில் இருந்து வல்லிபுரக்கோயில் செல்லும் வீதியில்)

(54488)

## கண்ணீர் அஞ்சலி

26-03-98 அன்று சிவபதமடைந்த எமது சக மாணவன்
இ. இரஞ்சிதன்
அவர்களின் தாயார்
**திருமதி இராமலிங்கம் காருண்ணியாபுஷ்பம்**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வருட [A பிரிவு]கலைப்பீட மாணவர்கள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(54468)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அரும்பிலே வாடிவிட்ட அழியா நினைவுகள்

செல்வி
**நிருத்திகா மயில்வாகனம்**
(பீர்த்தி)

அன்னை மடியில்: 09 - 02 - 1997
இறைவன் அடியில்: 02 - 03 - 1998

01 – 04 – 1998

அன்பின் திருவுருவமே! பாசத்தின் உறைவிடமே!
அறிவின் பிறப்பிடமே! அழகின் இலக்கணமே!
உந்தன் அன்பு முகம் காண ஆசை கேட்க
எங்கும் தேடுகின்றோம் ஈர விழிகளுடன்
மறக்க முடியவில்லை உந்தன் அன்பு நினைவுகள்!

என்றும் நினைவுடன் வாழும்
அப்பா, அம்மா, உறவினர்கள்,
அம்மப்பா (சிவகுரு)

''சிவகிரி வாசா''
குடத்தனை மேற்கு,
குடத்தனை.

(54446)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

## இதய அஞ்சலி

அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்திய

யாழ். கல்வி வலயம் I இன் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு.
**சு. இரத்தினராசா**

அவர்களின் திடீர் மறைவினால் தாங்கொணாத் துயரத்தில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், கல்விச் சமூகத்தினருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்,

இ. த. ஆ. சங்கம்
442, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(சி/3264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மானிப்பாயில்**

**ஒரு புதிய வைத்தியசாலை**

(நகரசபை முன்)

**Dr. க. சிவனடியான்**

நேரம்: தினசரி மாலை 3-00—6-30 வரை

(54469)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

**வயிரவன் சிவலை** [இறைவன்]

மலர்வு: **12 — 09 — 1916**

உதிர்வு: **16 — 02 — 1998**

உங்கள் நினைவு என்றும் எங்களுடன் வாழும்

மனைவி, பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:—
திருமதி கதிர்காமு கமலம் (மகள்)
கைதடி மேற்கு,
கைதடி.

(54466)

## கேள்வி அறிவித்தல்

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

மா அரிதட்டு

எமது அங்கத்தவர்களின் வெதுப்பகங்களில் பாவிப்பதற்கு ஐம்பது அரிதட்டு செய்து வழங்கு வதற்கு கேள்விகள் **10 - 04 - 98** ஆம் திகதி காலை **11. 00** மணி வரை மாவட்ட தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரிதட்டு அளவும், மாதிரியும் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ந. பாலவிநாயகர்,
மாவட்ட செயலாளர்.

39, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[சி/3260[

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வேலுப்பிள்ளை அப்புக்குட்டி**

பிறப்பு: **25 — 06 — 1928**

இறப்பு: **07 — 04 — 1988**

திதி: **01 — 04 — 1998**

பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
அன்பின் திருவுருவே
ஆருயிர் ஐயாவே

பத்தாண்டென்ன நூறாண்டுகள் ஆனாலும் தங்கள் அன்புத் திருவுருவம் அகலுமோ எங்கள் மனங்களை விட்டு.

தங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் சென்ரர்,
ஐ. எஸ். வி. லேன்,
சுழிபுரம்.

(54362)

## குரு பூசை ஆராதனை விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் நல்லைக்குருமணி ஸ்ரீ லஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 17 ஆவது ஆண்டு குரு பூஜை ஆராதனை விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளது.

யாகபூஜையுடன் ஆரம்பமாகும் இந்த குருபூஜை தின விழாவில் முற்பகல் 11 மணிக்கு குரு மூர்த்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்திய நாத சுவாமிக்கு சங்காபிஷேகம் இடம் பெறும்.

தொடர்ந்து விசேட பூஜை திருமுறை ஓதல், அர்ச்சனை கோபூசை ஆகியன இடம் பெற்று நண்பகல் 12-30 மணிக்கு மகேசுர பூஜையும் அதனைத் தொடர்ந்து சங்கீத பூஷணம், பண்ணிசைவாணர் வி. சிவஞான சேகரம் வழங்கும் பண்ணிசை ஆராதனையும் இடம் பெறும்.

(இ-4-7)

## சுன்னாகம் வாசி டோஹாவில் விபத்தில் பலி!

சுன்னாகம் ஏப். 1

மத்திய கிழக்கு நாடான டோஹாவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் இலங்கைத் தமிழர் ஒருவர் பலியானார். இச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த கார்த்திகேசு ஜெயராஜ் (45 வயது) என்பவரே பலியானவராவார்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவரைப் பின்னால் வந்த வாகனமொன்று மோதியதாகவும் — அதனால் கடுங் காயங்களுக்கு உள்ளான அவர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பின் அங்கு உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலத்தை இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, சுன்னாகத்தில் உள்ள இவரது மனைவிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-27)


மீண்டும் யாழ். நகரில்!

**01 - 04 - 1998 இல்**

# சிறி கருமாரி நகையகம்

காலாகாலமாக வாடிக்கையாளர்கள்
நன்மதிப்பைப் பெற்ற நகை வியாபாரிகள்

**சிறி கருமாரி நகையகம்**

இல. 175/2, கஸ்தூரியார் வீதியில்
(வின்சர் தியேட்டர் முன்பாக)

இயங்கிவந்த சிறிகருமாரி நகையகம்

மீண்டும் 01-04-1998 புதன்கிழமை

காலை 11-00 மணி தொடக்கம் 11-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் வியாபாரத்தை ஆரம்பிக்கிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு, நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

சிறி கருமாரி நகையக ஸ்தாபனத்தினர்
இல. 175/2, கஸ்தூரியார் வீதி, யாழ்.

(54487)


உ

ஓம் சக்தி

வடமராட்சி, அல்வாய் மேற்கு

அருள்மிகு

## தேவரையாளி கண்ணகாம்பிகா பரமேஸ்வரி தேவஸ்தான

புனராவர்த்தன நூதன பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் ஈசுரவருட பங்குனிமாதம் **20** ஆம் நாள் [ 1998 - 04 - 03 ] வெள்ளிக்கிழமை காலை 6 மணி 15 நிமிடம் முதல் காலை 7. 00 மணி வரையிலான சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு:

''சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு''
''பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்''

சிவஸ்ரீ
சோமஸ்கந்த தண்டாயுதபாணிதேசிகர்
(J. P.)

(பிரதமகுரு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை, தலைவர் அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை)

ஆலய பரிபாலன சபையினர்

(54399)


**விவசாயிகளே!** Bayer BAYER

உங்கள் மிளகாய்ச் செய்கையில் இலைச் சுருளல் (குருமன்) நோயை ஏற்படுத்தும் பனிப்பூச்சி, வெண் ஈ, அழுக்கணவன் என்பவற்றைக் கட்டுப்படுத்தி உயர் விளைச்சலைப் பெற ''பாயர்'' நிறுவனம் வழங்கும்...

**() அட்மயர் எஸ் எல் 200**

**() ரொக்குத்தயன் ஈசி 50 வீதம்**

என்பவற்றை மாறி மாறிப் பாவித்து உச்ச பயனை அடையுங்கள்!

**() சிறந்த பலனைப் பெற**

1ஆவது முறை - அட்மயர் எஸ் எல் 200
2 ஆவது முறை - 14-21 நாள்களின் பின் ரொக்குத்தயன் ஈசி 50./.
3 ஆவது முறை - 7 நாள்களின் பின் அட்மயர் எஸ் எல் 200
4 ஆவது முறை - 14-21 நாள்களின் பின் ரொக்குத்தயன் ஈசி 50./.
பாவியுங்கள்

★ எல்லா முன்னணி விவசாய வேளாண் வாணிப நிலையங்களிலும் பெறலாம்.

(பீடை நாசனிகள் அபாயகரமானவை; அவதானமாகக் கையாளவும்.)

இத்தகவலை வழங்குவது:

**ஹெக்கெம் லிமிட்டெட்,**
**25, பொஸ்ரர் லேன்,**
**கொழும்பு - 10.**

(54437)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிரகங்கள் காணாமற் போனது குறித்து மல்லாகம் நீதிமன்றில் மனு

யாழ்ப்பாணம், ஏப். 1

மாவிட்டபுரம்கந்த சுவாமி கோயிலுக்குரிய தங்கத்தாலான உற்சவ மூர்த்திகளும் வெள்ளியிலானகொடித் தம்பமும் மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்திருந்த போது கோயில்சுற்றாடலில் இருந்து காணாமற்போய் விட்டதாக ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பாக பாது காப்பு தரப்பினருக்கும் அப்போது முறைப்பாடு செய்யப்பட்டதாக அவர் நீதிமன்றில் தெரிவித்தார்.

உற்சவ மூர்த்திகள் 60 தங்கப்பவுண் நிறையுடயவை என்பது குறிப்பிட தக்கது.

இதே வேளை மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான இரு விக்கிரகங்களை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அடையாளம் காட்டி ஆலய பிரதம குரு பெற்றுக்கொண்டார்.

காங்கேசன்துறைப் பொலீஸாரினால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆறு தெய்வ விக்கிரகங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அடையாளம் காண்பதற்காக நீதிமன்ற அறையில் கடந்த சில நாள்களாக இந்தவிக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் மேற்படி நீதிமன்றுக்கு சமுகமளித்த ஆலய பிரதம குரு அவற்றில் இருவிக்கிரகங்களையும் நீதிவான் மு. திருநாவுக்கரசு மற்றும் காங்கேசன்துறை பொலீஸார் முன்னிலையில்அடையாளம் காட்டிப் பெற்றுக் கொண்டார்.

தற்பொழுது 3 தெய்வ விக்கிரகங்களும் ஒரு திருவாசியும் நீதிமன்றில் அடையாளம் காண்பதற்காக வைக்கப் பட்டுள்ளன.

(இ-5)

## உதயன்

### இரும்புத்திரை

மாத்தறை மாவட்டத்திலிருந்து பதினெட்டுப் பேர் கொண்ட நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்றிருந்தது. மாத்தறை மாவட்டத்தின் உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்த நல்லெண்ணத் தூதுக்குழுவில் அங்கம் வகித்தனர். பிரஸ்தாப தூதுக் குழுவில் ஆளுங்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டையும் சேர்ந்தவர்கள் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1994 ஆம் ஆண்டின் பின்னர் தெற்கிலிருந்து கிழக்குக்குப் பொதுமக்கள் நல்லெண்ணத் தூதுக்குழு சென்றதால் அது புதிய முயற்சியாகவும் நோக்கப்பட்டது. மேலும் தெற்குக் குழு அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவதானிக்கவும், கலந்துரையாடவும் திட்டமிட்டிருந்தது.

இத்தகைய நல்லெண்ணத் தூதுக்குழுக்கள், பொது மக்கள் மட்டத்தில், ஒரு சாராரின் நிலை குறித்து மறுசாரார் நேரில் அறிந்து கொள்ளவும், தப்பான அபிப்பிராயங்கள், சந்தேகங்களை நீக்கிக்கொள்ளவும் பெரிதும் உதவும்.

குறிப்பாக தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்கள், அவர்கள் தமது ஆகக் குறைந்த அடிப்படை உரிமைகளைத் தானும் அனுபவிக்க முடியாதவர்களாக வாழும் நிலைமைகளை தெற்கில் வாழும் சிங்கள மக்களுக்குத் தெரியாது.

அரசியல்வாதிகள் குறிப்பாக அரசாங்கத்தினர் இவற்றை மறைத்து தெற்கு மக்களை இருட்டில் வைத்திருக்கிறார்கள்; இரும்புத்திரை போட்டிருக்கிறார்கள் இந்த நிலைமை நீங்கினாலேயே இரு தரப்புகளிடையேயும் புரிந்துணர்வும், நல்லெண்ணமும் மலரும். இன உறவும் அன்னியோன்யமும் வளர வழி பிறக்கும்.

தெற்கிலும் மேற்கிலும் இருந்து கிழக்கிற்கும் வடக்கிற்கும் நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வந்து நிலைமையை நேரில் அவதானித்தாலேயே தமது அரசியல் தலைவர்கள் எந்தளவு அநியாயமாக நடந்து கொள்கிறார்கள் என்பதனை மக்கள் அறிய முடியும். அந்த அநியாயத்துக்கு எதிராக மக்கள் சக்தியை பயன்படுத்தி நியாயம் வழங்குமாறு அவர்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியும்.

போர் என்ற அரக்கன் இரண்டு இன மக்களுக்கும் விளைவிக்கும் அழிவுகளையும் கெடுதல்களையும் இரு தரப்பாரும் நேரில் அறிந்து கொண்டு நீதியின் பக்கம் செயற்படவும் தூண்டுதலாக அமையும்.

ஆனால் — தெற்கிலிருந்து சென்ற நல்லெண்ணத் தூதுக்குழுவினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை: ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டனர். தூதுக்குழுவினரை வரவேற்றுச் சென்று அங்குள்ள நிலைமைகளைக் காண்பிக்கக் காத்திருந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிப் போக நேர்ந்ததாகத் தகவல்.

இத்தகைய தடைகள் சிங்கள—தமிழ் மக்களை மேன்மேலும் துருவப்படுத்தவும், தப்பான கணக்குகளைப் போடவுமே உதவும்.

### பனையால் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 1

பனைமரத்தில்ஓலை வெட்டிக் கொண்டிருந்தவர் தவறிக் கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

பொன்னாலையில் திங்களன்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் தம்பிராசா பாஸ்கரன் (வயது21) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

ஓலை வெட்டிய கத்திதவறி அவரின் கையை வெட்டியதை அடுத்தே கைநழுவிக் கீழே விழுந்தார் என தெரிவிக்கப் பட்டது.

படுகாயமடைந்தவர்யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(ஐ-15-139)

### விற்பனை நிலையம்

நவாலி, ஏப். 1

சித்திரைப் புத்தாண்டையொட்டி யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ். வை. எம். சி.ஏ. மண்டபத்தில் சிறப்புவிற்பனை நிலையமொன்றைத் திறந்து வைத்துள்ளனர்.

(இ-100)

### காங்கேசன் தொழிற்சாலை:

# 11 கோடி 60 லட்சம் ரூபா ஜனாதிபதி ஒதுக்கினார்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான ஆரம்பப் பணிகளை மேற்கொள்ள ஜனாதிபதி 11 கோடி 60 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். தொழிற்சாலை இயங்க ஆரம்பித்ததும் அதற்கான மூலப்பொருள்களான கிளிங்கர், ஜிப்சம் போன்றவற்றை இறக்குமதி செய்ய 70 கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணை கைத்தொழில் அமைச்சரால் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக் கப்படவுள்ளது.

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். ஏ. ஒபடகே மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

கடந்த மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர் நேற்றுக்காலைகொழும்பு திரும்ப முன்னர் உதயனுக்குஅளித்த பேட்டியிலேயே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெருந்தொகையான நிதியுடன் சம்பந்தப்பட்டஇந்த விடயத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தாலும், இந்த நிதியைப்பெற உதவும் நாடு ஒன்றைத் தேட வேண்டியிருக்கும். அவ்வாறு எவராவது முதலிட சம்மதம் அளிக்கும் பட்சத்தில் தொழிற்சாலையை மீள இயக்க முடியும் – என்றார்.

(ஐ-3-9)

# நள்ளிரவு கூரையில் ஏறி 'சோலர் பனல்' திருட்டு!

யாழ்ப்பாணம், ஏப். 1

25 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த சூரிய வெளிச்சம் மூலம் மின் சாரம் பெறும் ''சோலர் பனல்'' நள்ளிரவு கூரையில் இருந்து களவாடப் பட்டுள்ளது.

மூன்றரை அடி நீளமும் ஒன்றரை அடி அகலமுடைய சண்ரெக் இன 40 வாற்ஸ் வலுவுடைய ''சோலர் பனலே'' இவ்வாறு யாழ். ஐயனார் கோயிலடியிலுள்ள வீடொன்றிலிருந்து களவாடப்பட்டுள்ளது.

இது குறித்து பொலீஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருடர்கள் இரவு கூரை மீது ஏறி இதனைக் கழற்றி உள்ளனர்.

(இ-4)

### யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

## பெருங்கருணை வாழ்வே

நெடியவெயில் மூன்றுமெய்து நின்றாய் வாழி
நீறணியுங் கோலமே நிறைந்தாய் வாழி
கடியபிணி நோயகற்றிக் காப்பாய் வாழி
காரணமாய்க் காரியமாய்க் கலந்தாய் வாழி
துடியிடையா ளுமைபாகத் துறைவாய் வாழி
துகளறுநற் போதமுறத் துளிர்ப்பாய் வாழி
வடிவமுறாப் பெருங்கருணை வாழ்வே வாழி
வண்ணைவைத் தீஸ்வரா வாழி! வாழி!!

– ச, தங்கமாமயிலோன்

(இன்று புதன்கிழமை பத்தாம் திருவிழா)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் பத்தாம் நாள் தேர் உற்சம் நடைபெறும்.

இந்த ஆலயத்தின் புதிய சித்திரத்தேர், வெள்ளோட்டம் 8 ஆம் திகதி நடைபெறும். (இ-15)

★ ★ ★

நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக தினமணவாளக் கோல விழா இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு ஆயிரத்து எட்டு சங்காபிஷேகத்துடன் நடைபெறும். (இ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம். ஏப். 1

மானிப்பாய் கட்டுடை அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. (ஐ)

★ ★ ★

சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

பத்தாம் நாளாகிய எதிர்வரும் 10 ஆம் திகதி விசேட மேளக்கச்சேரி சகிதம் இரதோற்சவம் இடம்பெறவுள்ளது. (இ-8)

★ ★ ★

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்சவ உற்சவம் நேற்று செவ்வாய் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை மஞ்சத்திருவிழாவும், 5ஆம்திகதிகைலாச வாகனத்திருவிழாவும், 6 ஆம் திகதி சிம்ம வாகனத் திருவிழாவும், 7ஆம்திகதி குதிரை வாகனத்திருவிழாவும், 8 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 9 ஆம்திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி அதிகாலை 5 மணிககு தீர்த்தத்திருவிழாவும், 11ஆம் திகதி இரவு 8மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறும்.

காலைத்திருவிழா காலை 10 மணிக்கும், மாலைத் திருவிழா 7.30 மணிக்கும் ஆரம்பமாகும். (இ-7)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல்1

சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயிலின் வருடாந்த உற்சவம் இன்றுபுதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி சப்பரத்திருவிழாவும், 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

யாழ்ப்பாணம், ஏப்ரல் 01

மூளாய் முத்துக்குமார சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன் காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 9ஆம் திகதிவியாழக்கிழமைரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 01

நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 8 ஆம்திகதி சப்பறமும், மறுநாள் தேர்உற்சவமும், 10 ஆம்திகதிதீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(இ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா (மஹா கும்பாபிஷேகம்) இன்று புதன்கிழமை காலையில் நடைபெறும்.

மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். (இ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

யாழ். நீராவியடி அருள்மிகு தோப்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று செவ்வாய் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து நாள்கள் மாலை 2.30 மணிமுதல் 6.00 மணிவரை விசேட அபிஷேக ஆராதனைகளும். விநாயகப்பெருமானின் உள்வீதி வலம் வருதலும், இடம் பெறும்.

விசேட நிகழ்ச்சியாக தினமும் காரை.பிரம்ம ஸ்ரீ கு. சிவராஜ சர்மாவின் ''புராதன இதிகாச முத்துக்கள்'' என்ற தலைப்பிலான சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (இ-7)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப். 1

கரவெட்டி யார்க்கருவரசித்தி அருள் மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று புதன் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

மாவை கொல்லங் கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9.12 தொடக்கம் 10.12க்கிடையில் நடைபெறும். தொடர்ந்து 14 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 15 ஆம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும்.

(இ-ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஜபபானிய தயாரிப்பிலான ஜென்மார் டீசல் ஜெனரேற்றர் (2000.KW) விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. சிவகுமார், இல, 5, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். [சி/3257]

---

ரியூட்டறி கொட்டில். தையல் மெசின்கள் (Singer), சிற்சாக், கட்டில்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு: த. அம்பிகைபாகன், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [54444]

---

பல இன கலர் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:– (நண்பகல் 12.00 மணியில் இருந்து பார்வையிடலாம்) A. அருளானந்தம் (குட்டி), 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்ஒழுங்கை) (54390)

---

நல்ல நிலையில் உள்ள M D 50 – HONDA மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. மணியம் வர்த்தக நிலையம், பலாலி வீதி, உரும்பிராய் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். [54452]

---

கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல அளவிலுமான அலுமினியப் பானைகள், செம்புகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தபாற்கட்டைச் சந்திக்கு அருகில் R. சங்கரன் இல. 75, செம்மணி ஒழுங்கை, அரியாலை. [54476]

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் இல. 403, மணிக்கூண்டு வீதியில், கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: செ. மகாலிங்கம், 07, யாழ். வீதி, யாழ்ப்பாணம். [54456]

## திருமணசேவை

திருமணம் நடைபெறாதவர்களுக்கு திருமணம் நடைபெற முன்போல் இயங்குகிறது. மகாவிஷ்ணு கோயில் சோதிட நிலையம், சோமசுந்தர வீதி, ஆனைக்கோட்டை. (35 வருட காலமாக நடைபெறுகிறது). [54400]

---

முன்பு என்னுடன் தொடர்பு கொண்டவர்களும், புதியவர்களும் எனது பழைய விலாசத்தில் செவ்வாய், ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் தொடர்பு கொள்ளலாம். வரமுடியாதவர்கள் ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தபால் மூலம் தொடர்பு கொள்ளலாம். திருப்தியானதும், துரிதமானதுமான சேவை. கு. திருவிளங்கம், 16/6, வளன்புரம், கொழும்புத்துறை. [54474]

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். ஒவ்வொருநாளும் கிடைக்கும். (காலைதொடக்கம் மாலை வரை) Lucky Farm Sales Centre, palaly Road, Thirunelvely. [54473]

---

### தபால் மூலம் கல்வி

16, 17, 18, 20, 21 ஆம்
புலமைப்பரிசில்
பயிற்சி வினாத்தாள்கள்
பெற்றுக்கொள்ளலாம்.

**BOND,**
த.பெ. இல. 140,
யாழ்ப்பாணம்.
(54426)

## புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் வினாத்தாள், பயிற்சிப் புத்தகம் P. அம்பிகைபாகன் என்ற பெயரில் வருவது யாழ். புதிய கல்வி நிலைய ஆசிரியர் த. அம்பிகைபாகன் (முன்னாள் யாழ். இந்து ஆசிரியர்) என்பவரது அல்ல. எனது வினாத்தாள்களை 57/2B, W. A சில்வா மாவத்தை கொழும்பு- 06 (T. P 590423) இல் பெற்றுக்கொள்ளலாம். த. அம்பிகைபாகன் 219,, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (54475)

## தேவை

தனியாக உள்ள, சைவ ஆசாரமுள்ள உதவியாளர் ஒருவர் தேவை. தொடர்பு இல: 722, C/O உதயன், யாழ்ப்பாணம். (54478)

## கண்டீர்களா?

3.5 அடி நீளமும் 1.5 அடி அகலமும் வாய்ந்த SUNTEC-40W சோலர்பனல் 29-3-1998 நள்ளிரவு கூரையிலிருந்து காணாமல் போய்விட்டது. இதுபற்றி தகவல் தெரிந்தவர்கள் ''அன்னை இல்லம்'' இல.5, ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். [54447]

---

## பிறந்தநாள் நினைவலைகள்

### செல்வி சுந்தரேசன் மதுஷா
(ஆஷா)

தோற்றம்: 01–04–1996
மறைவு: 20–11–1997

எங்கள்
அன்புத் தங்கை ஆஷாவே
காலைப் பனி மழையில்
இதழ் விரித்துப் பூத்தவளே
காலனுக்கு விருந்தாகவா
எங்கள் கரங்களில்
வளர் பிறையாய் வலம் வந்தாய்?
உன் நினைவால் வாடும் — எம்
உளங்களைத் தேற்றாயோ!

உன் நினைவில் வாடும்:
அன்புச் சகோதரர்கள்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மத்தி.
(54480)

---

## ஓயாத நினைவினில் ஓராண்டு...



செல்வன்

### இரத்தினகோபால் ஜனனன்
(சிவபாலன்)

(யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, மாணவன்)

மலர்வு: 17–07–85
உதிர்வு: 12–04–97

திதி: 01-04-98

அன்புச் செல்வனே அருமைப் புதல்வனே
ஓயாத நினைவினிலே ஓராண்டு சென்றதடா
ஆறாது எம் மனது அழியாது உன் நினைவு
ஐயிரண்டு மாதம் உனை ஆசையுடன் சுமந்து பெற்றேன்
பன்னிரண்டு ஆண்டு வரை பக்குவமாய் வளர்த்து வந்தேன்
கண்ணின் மணி போலே எம் கண் இமைக்குள் பூட்டி வைத்தோம்
எம் கண்ணை மறைத்து விட்டு இறைவன் உன் உயிரைப் பறித்து விட்டான்.

அரும்பாகி மரமாகி நிழல் தருவாய் என்றிருந்தோம்
பூவிலேயே உனை நாம் பறிகொடுத்த பாவியானோம்
இப்பாவிகள் நாம்படும் துயரம் இப்பாரினிலே யாரறிவார்

எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவடியின் கீழ்
உன் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்தனை செய்யும்

உன் அம்மா, அப்பா,
சகோதரர்கள் உறவினர்கள்.

99/6, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(54477)

---

## ஈச்சமோட்டை சனசமூக நிலையம்

56 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு
நடத்தும்

### மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

இப்போட்டி 7 வீரர்கள் பங்குபற்றும் 12 ஓவர் போட்டியாக நடைபெறும்.

விண்ணப்பக் கட்டணம்:- 100/–
விண்ணப்ப முடிவு திகதி:- 07-04-98

தொடர்புகளுக்கு:

சச்சி தவநேசன்,
(நிலையச் செயலாளர்)
40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(54459)

---

குளப்பிட்டிச் சந்தியில்!

## மகானந்த வாசா

### உள்ளூர், சர்வதேச நேரடி தொலைபேசிச் சேவை

சனிக்கிழமை 28 – 03 – 1998 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இங்கிருந்து நேரடி அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும், வெளிநாட்டிலிருந்து எமது இலக்கங்கள் ஊடாக அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

தொலைபேசி இல: 070 - 212216

குளப்பிட்டிச் சந்தி
(கொக்குவில் தபாலகம் முன்னால்)
(50011)

---

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## வெற்றுப் பொருள்களுக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

எம்மிடம் வெற்றுச் சாக்கு, உரப்பை, வெற்றுப் பரல், பழைய ரயர்கள் ஆகியன விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் இவற்றைப் பார்வையிட்டு தமது விலையைக் குறிப்பிட்டு 98 – 04 – 04 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பதாரர் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 150/–விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது செலுத்த வேண்டும்.

பொது முகாமையாளர்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
30 -- 03 – 98
(சி–3261)

---

வெளிவந்து உள்ளது

### நாமும் சுற்றாடலும்

புதிய பாடத்திட்டம்

புலமைப்பரிசில் மாணவருக்கு சிறந்த வழிகாட்டி

**வினா – விடைகள்**

பொது அறிவுக் கேள்விகளையும்
விடைகளையும் உள்ளடக்கியது.
இலகுவாக மீட்டல் செய்யக்கூடியது.

வெளியீடு:

**சுப்பிரமணிய புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.
[54443]

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி யோகேஸ்வரி இரத்தினராஜா
அவர்களின் கணவர்

### சு. இரத்தினராசா
(கல்விப் பணிப்பாளர் வலயம் 1)

அவர்களின் மறைவு குறித்து நாம் அதிர்ச்சி அடைவதுடன் எமது ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகிறோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.
உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை,
ஆனைக்கோட்டை.
(50012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்...

(இரண்டாம் பக்க தொடர்)

★ இடைவழியில் சைக்கிள் பழுதடைந்தால் சைக்கிளை மாற்ற முடியும்.

போட்டியாளர்கள் அன்றைய தினம் காலை 8 மணிக்கு முன்பதாக போட்டி ஆரம்பமாகும் இடமான துரையப்பா விளையாட்ட ரங்குக்கு சமுகம் தரல் வேண்டும்.

★ விண்ணப்பங்களை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரியிடம் அல்லது யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கப் பிரதிநிதியும், யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியருமான சண். தயாளனிடம் அல்லது அருகில் உள்ள பிரிகேட் தலைமையகம் ஒன்றிடம் கையளிக்கலாம்.

சமாதான சைக்கிளோட்டமாக இந்நிகழ்வு நடத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

# யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

எதிர்வரும் **05-4-1998** அன்று நடைபெறவிருந்த எமது பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகிறோம்.

செயலாளர்

1998-04-01 பழைய மாணவர் சங்கம் (சி/3275)

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்விப் பணிப்பாளராக இருந்து அரிய சேவைகள் பல ஆற்றி அமரத்துவம் எய்திய

## உயர் திரு. சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்களது மறைவு கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நல்லூர் தெற்கு
ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.

(54501)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளராகிய

## அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்கள் 30 – 03 – 1998 திங்கட்கிழமை காலமானதையிட்டு நாம் அதிர்ச்சி அடைவதுடன், ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

டாக்டர் சி. சிவானந்தராஜா,
(M.B.B.S. (Cey.), Council Member, Jaffna University)
குடும்பத்தினரும்.

இல. 45, பெர்ணான்டோ றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு – 06. (சி/3273)

# கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி சீனியர் பாக்கியம்

[காரைநகர்]

எமது மாமியாரின் துயரச் செய்தி கேட்டு ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் மரணச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், யாழ்ப்பாணத்தில் எமது இல்லத்திற்கு வந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பு மருமகன்
யோகானந்தன்
(DRCC)
கோண்டாவில்.

60/6, இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(54509)

## செல்வா நூற்றாண்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

தனை உரை நிகழ்த்தினார்கள்.

இவர்களின் உரையைத் தொடர்ந்து செல்வா நினைவுக் கீதங்கள் இசைக்கப்பட்டன.

விழாவில் செல்வாவின் உருவம் பொறிக்கப்பட்ட கொடிகள் விற்பனைக்கு விடப்பட்டன.

மதகுருமார்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் செல்வா நினைவுத் தூபிக்கு முன்னர் மலரஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து யாழ். மத்திய கல்லூரியில யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் தந்தை செல்வா நூற்றாண்டு விழாக் கூட்டம் நடைபெற்றது

அதேநேரம்—

தந்தை செல்வா நினைவுக் குழுவினரும் நேற்று செல்வ நினைவுத் தூபியில் மலரஞ்சலி செலுத்தினர்.

அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு நேசகுமார் அடிகளார், தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வண பிதா சூரியகுமார், ஆ. தர்மரத்தினம் ஆகியோரைக் கொண்ட செல்வா நினைவுக் குழுவினரே நேற்றுக் காலை 10.45 மணியளவில் மலரஞ்சலியைச் செலுத்தினர்.

(உ-51-15-139)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

மைகள் அமைப்பு வெளிநாட்டு தூதரகங்கள் ஆகியவற்றுக்கு விலாசமிடப்பட்ட மகஜர்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என்று ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

'புலிகளின் நிலைகள் என்று கூறி மேற்கொள்ளப்படும் தாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்களேகொல்லப்படுகின்றனர். இந்தநிலை நீடிக்க உதவக் கூடாது' என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ–3)

## தவக்கால சிந்தனை

(36 ஆம் நாள்)

உடலை அழகுபடுத்த எத்தனை முயற்சிகள், ஆடை அலங்கரிப்புக்கள்; அழகு சாதனங்கள். இவை எல்லாம் ஏன்? மற்றவர் எம்மைப் பார்த்து வியக்க வேண்டும் என்ற முயற்சியின் வெளிப்பாடுதானே?

ஆனால் உள்ளம் [மனம்] எப்படி உள்ளது? அழகற்று, அமைதியற்று, வலுவிழந்து, அங்கலாய்க்கின்றது. அகத்தின் அழகே முகத்தின் அழகு என்கிறார்கள்.

எல்லா மதங்களும் நோன்பு, விரதம், ஒரு சந்தி என மனிதன் ஒருவன் தன்னை ஒறுத்து தன் உணர்வை, உள்ளத்தை அழகுபடுத்த முனைகின்றான. இவற்றுக்கு தியானம், செபம், வழிபாடு என்ற வழியையும் தேடுகின்றான.

இவற்றிலும் வெளிவேடம் இடாதீர்கள். செயற்கை அழகில் மூழ்கி தூய்மையை, புனிதத்தை இழந்துவிடாதிருக்க ஒறுப்பதில் வார்த்தைகளையும் கட்டுப்படுத்தி பாருங்கள்.

மௌனத்தின் அழகு ஆன்மீக அழகில் புது மெருகை ஊட்டும் அகத்தில் அன்பு பிறக்க புறத்தில் அருள் ஒளி ஜொலிக்கும் இதனால். அகிலத்தையும்அன்பியத்தால் நிறைக்கலாம்.

-யோசப் பாலா

## உதயவாக்கு

நேற்றைய தினத்தை எண்ணி வருந்தாதீர்கள் இன்றைய நாள் தருவதை அனுபவித்துக் கொள்ளுங்கள். நாளைக்காகத் திட்டம் தீட்டுங்கள். அதுவே உங்களுடைய நாள்.

– லோங்பைலோ

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சு. இரத்தினராசா

(கல்விப் பணிப்பாளர்: யாழ். வலயம் I)

யாழ். வலயம் I இன் கல்விப் பணிப்பாளரும், எமது கலாசாலை விரிவுரையாளர்

**திரு. சு. கனகநாயகம் அவர்களது**

சகோதரரும் ஆகிய திருமிகு சு, இரத்தினராசா அவர்களது திடீர் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்தும சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர் குழுமம்,
ஆசிரிய மாணவர்கள், பணியாளர்கள்.
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி. (54505)


# சுனில் ஆட்ஸ்

19-03-1998 வரை ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

Photo Print Quic Service

**- SUNIL · ARTS -**

272, Stanly Road, Jaffna.

(சி/3272)



# LION AIR விமான சேவை அறிவித்தல்

LION AIR முதலாவது விமானத்தில் இன்று பயணம் செய்ய (01-04-1998) (புதன்) பதிவு செய்த கீழ்க்காணும் பயணிகளும்

01. திருமதி கே. சுப்பிரமணியம்
02. திருமதி எம். மனோகரன்
03. திரு. சி. பி. ஆனந்தராஜா
04. திருமதி ஏ. எச். தங்கரட்ணம்
05. திரு. எல். சுப்பையா
06. திருமதி எம். தில்லைஈஸ்வரி
07. செல்வி எம். கோமதி
08. திரு. எஸ். செல்லப்பா
09. செல்வி சி. வனஜா
10. செல்வி ஆர். வசந்தி

இரண்டாம் விமானத்தில் பயணம் செய்ய பதிவு செய்த கீழ்க்காணும் பயணிகளும்

11. திரு. எஸ். தம்பிப்பிள்ளை
12. திருமதி எஸ். தெய்வராணி
13. செல்வி என். திரேசமலர்
14. திரு. பி. முருகேசன்பிள்ளை
15. திருமதி எம். ராசமணி
16. திரு. ஐ. சேனாதிராஜா
17. திரு. கே. சிவநேசன்
18. செல்வி என். செபஸ்தியன்

குறித்த தினத்தில் பயணம் செய்ய முடியாதுள்ளது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

இவர்கள் தங்களது பயணத்தினத்தை இன்று (01-04-98) LION AIR காரியாலயத்தில் நிச்சயப்படுத்திக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்கப்படுகின்றார்கள்.

முகாமையாளர்,
LION AIR (PVT) LTD.,
Jaffna.

(சி/3271)



## ரிப்ரொப் இன்டர்நஷனல் பிரைவேட் கம்பனியினரின் பூட்டுமார்க் கைலிகளின்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்களாக **த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்** ஸ்தாபனத்தினரை நியமித்துள்ளோம் என்பதனை வடமாகாண வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது தயாரிப்புக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

# த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

42, 44 பெரிய கடைவீதி, [illegible] தொலைபேசி: 021 – 2985

தற்காலிக முகவரி: 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (54511)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்)
கொடுத்த தகவலை அடுத்து படையினர் அங்கு விரைந்த தாகவும் —

அத்தகவல் மூலம் படையினரைத் திசை திருப்பி — தமது வலையில் விழ வைத்து — அப்பகுதிக்கு வரவழைத்து — அவர்கள் எதிர் பாராத வேறு திசையிலிருந்து புலிகள் தாக்கியிருப்பதாகவும் —

முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

## தப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்)
அது பற்றி சிறைச்சாலை அத்தியட்சகரிடம் செய்த முறைப்பாடுகள் கவனிக்கப் படவில்லையென்றும்—

அதன் காரணமாகவேதாம் தப்பிச் சென்றதாகவும்—

சந்தேக நபர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்தின் பதிவாளர் அவருக்கு அனுப்பி வைத்துள்ள பதிலில் பொலிஸ் நிலையமொன்றில் சரணடையும் படியும்—

போதுமான பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் — தெரிவித்துள்ளார். (உ-8)

## வாசகர்களே! கவனம்!!

இன்று ஏப்ரல் முதலாம் திகதி; ஏப்ரல் முட்டாள் தினம்.

எனவே வாசகர்களே கவனம். உங்களுக்கு நெருங்கியவர்கள் உங்களை ஏமாற்ற முயற்சிப்பார்கள்; எச்சரிக்கையாக இருங்கள்.

உங்களுக்கு நெருங்கியவர்களுள் உதயனும் ஒருவன் அல்லவா? உங்களை ஏமாற்றும் முயற்சியில் உதாரணத்துக்கு ஒன்றுதான் முன்பக்கத்தில் பிரசுரமாகியுள்ள ''தமிழக அரசு கலைப்பும், ஜெயலலிதாவுக்கு துணைப் பிரதமர் பதவியும்'' என்ற செய்தி.

## தினசரி...

(முதலாம் பக்கத் தொடர்)
வித்தன.

ஞாயிறு தவிர தினசரி காலை 8. 30 மணிக்கும் பிற்பகல் 1. 30 மணிக்கும் கொழும்பிலிருந்து மொனரா சேவை விமானம் பலாலிக்குப் புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

லயன் ஏயர் விமானசேவையும் தினசரி இரண்டு தடவைகள் நடைபெற்று வருகின்றன. (உ)

## குழந்தையின்...

(முதலாம் பக்கத் தொடர்)
னியா வைத்தியசாலையில் அனுமதித்தார். வயிற்றோட்டம், வாந்தி காரணமாக அனுமதிக்கப்பட்ட குழந்தையின் நிலை கவலைக்கிடமாகவே குழந்தை அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு கடந்த 30 ஆம் திகதி இரவு குழந்தை மரணமானது.

குழந்தையை வவுனியாவுக்கு மீண்டும் கொண்டுவர அனுமதியில்லாத காரணத்தால் வவுனியா வைத்தியாசலை அம்புலன்ஸ் சடலத்தை ஏற்றிவர மறுத்துவிட்டது.

அதேவேளை தென்பகுதிக்கு வந்ததற்கான பாஸ் இல்லாததால் சடலத்துடன் தாயை நிற்க அனுமதிக்க முடியாதென அநுராதபுர வைத்தியசாலை அதிகாரிகள் மறுத்துவிட்டனர். அதனால் தாய் அம்புலன்ஸிலேயே திரும்பி வவுனியா வந்துவிட்டார்.

நேற்றுக் காலையில் தாயார் பாஸ் வழங்கும் அலுவலகத்திற்குச் சென்று காரணத்தைக் கூறி பாஸ் கேட்ட போது பாதுகாப்புத் தரப்பினர் பாஸ் வழங்க மறுத்ததுடன் ஏற்கெனவே அநுராதபுரத்திற்குச் சட்டவிரோதமாகச் சென்றது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனராம். இதனால் பயந்துபோன தாயார் தொலைபேசி மூலம் தனது பிள்ளையை அரச செலவில் அடக்கம் செய்யும்படி அநுராதபுரம்வைத்தியசாலைக்கு அறிவித்துவிட்டு கண்ணீரும் கம்பலையுமாக வன்னிக்குத் திரும்பிச் சென்றார் என அறியவந்தது. (உ-167)

## தந்தை...

(முதலாம் பக்கத் தொடர்)
மன்னார் மேலதிக அரச அதிபர் எஸ், விஸ்வலிங்கம், மன்னார் நகர பிரதேச செயலர் உட்பட இந்து,முஸ்லிம் குருமார்களும் கலந்து கொண்டனர்,ஏழுஅடி உயரமானஇந்த சிலை 75 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

## ஐரோப்பிய தூதர் யாழ். நகரில்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

ஐரோப்பிய சமூக நாடுகளின் தூதர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்துள்ளார். அவர் இங்கு சில தினங்கள் தங்கியிருப்பார்.

நேற்று வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவை பலாலியில் அவர் சந்தித்துப் பேசினார். யாழ். நிலைமைகள், தேவைகள், எதிர் பார்ப்புகள், வெளிநாடுகள் வழங்க வேண்டிய உதவிகள் போன்ற விவரங்களை வடபிராந்தியத் தளபதி அவருக்கு விளக்கியதாக அறியவந்தது. (உ)

## இன்று நடைபெறும் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு:

★ 3-45 மணி:- பாஷையூர் சென். அன்ரனீஸ் வி. க. எதிர் பல்கலைக்கழக அணி.

★ 5-00 மணி:- குருநகர் பாடும்மீன் வி. க. எதிர் ஊரெழு றோயல் வி.க.

(உ)

## தமிழக அரசு...

(முதலாம் பக்கத் தொடர்)
யில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார் என்று முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

துணைப் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள செல்வி ஜெயலலிதாவுக்கு வேறுஏதேனும் அமைச்சுப் பொறுப்பு அளிக்கப்படுமா என்றவிவரம் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை தெரியவரவில்லை.

இதற்கிடையில் —

தி. மு. க. அரசு கலைக்கப்பட்ட செய்தி தமிழகத்திலும் மற்றைய இந்திய நகரங்களிலும் பரவலான அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பாரதீய ஜனதா அரசு, செல்வி ஜெயலலிதாவின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்துஅரசியல் கோமாளித்தனத்தைமேற்கொண்டிருப்பதாகத் தமிழக முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி குறிப்பிட்டார் என்று பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் இன்று காலை அறிவித்தது.

தமிழக அரசைக் கலைப்பதற்கான வாஜ்பாய் அமைச்சரவையின் சிபாரிசை ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் ஏற்க மறுத்து அந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அனுப்பி வைத்ததாகவும் —

எனினும் அமைச்சரவை மீண்டும் அந்தத் தீர்மானத்தை உறுதிப்படுத்தி ஜனாதிபதிக்கு அறிவித்ததை அடுத்து —

மிகுந்த தயக்கத்துடன் தமிழக அரசைக்கலைப்பதற்கான உத்தரவில் ஜனாதிபதி கையெழுத்திட்டார் என்றும் —

ராஷ்டிரபதி பவன் செய்தி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனம் ஒன்று தகவல்வெளியிட்டது.

தமது அரசு கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து கலைஞர் கருணாநிதி தொடர் போராட்டம் ஒன்றை நடத்தப் போகிறார் என்றும் —

அது பற்றிய விவரம் இன்று காலை வெளியிடப்படும் என்றும் —

'அறிவாலயம்' (தி. மு. க. அலுவலகம்) பணிமனையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)


# மொனரா எயர் சேவிஸ்

**இன்று முதல் யாழ் - கொழும்பு இடையே தினசரி இரண்டு சேவைகள் நடைபெறும் என்பதை பயணிகளுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

குறிப்பு:

இன்றைக்குப் பின்னர் ஒரு தினத்தில் எமது சேவையில் கொழும்பு பயணம் செய்வதற்கு டிக்கெட் பதிவு செய்தவர்களும், இன்று காலை யாழ். ரயில் நிலையத்துக்குச் சமுகம் கொடுத்தால், இன்றே பயணம் செய்யக்கூடியதாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம். மேலதிக விமான சேவைக்கு வாய்ப்புக் கிட்டியிருப்பதால், பிந்திய திகதிகளில் பயணம் செய்யப் பதிவு செய்தவர்கள் எமது அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு, அதற்கு முந்திய ஒரு திகதியில் பயணம் செய்வதற்கு ஏற்றவாறு பயணத் தினத்தை மாற்றலாம் எனபதையும் அறியத்தருகின்றோம்.

எமது யாழ். முகவர்கள்:

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,**
79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3276)

# DCS
# 2000 Scholarships Scheme Competitive Examination 98-99

**DCS**
DATA CONNECTION SYSTEM (PVT) LIMITED

Admission Cards for the above Examination have been posted to all applicants.

The Examination will be held on Sunday, 5 th April from 10-30 a.m. to 11-30 a.m. at:

1. Hindu Ladies College, Jaffna.
2. J/Vembady Girls' High School, Jaffna.
3. Jaffna Central College, Jaffna.

Applicants must sit the Examination only at the centre indicated in their Admission cards.

Anyone who has not received the Admission Card should contact the undersigned immediately at the DCS office with proof of having paid the Application Fee (receipts issued by the DCS, Jaffna or post office receipts in the case of Money Orders sent by Registered Post)

Director (Ad.),
DCS,
124/2, Palaly Road,
P.O. Box 144
Thirunelvely.

(54423)

# Institute of Informatics Studies
Jaffna, Sri Lanka.

# புலமைப்பரிசில் திட்டம் 98

31-03-1998 உடன் முடிவடைந்த எமது விண்ணப்பப்படிவ முடிவுத் திகதி அநேக மாணவர்களினதும், பெற்றோர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க 15-04-1998 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் எக்காரணம் கொண்டும் நீடிக்கப் படமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்.

**போட்டிப்பரீட்சை நடைபெறும் திகதி: 17 - 05 - 1998**
**போட்டிப்பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் திகதி: 01-06-1998**
**பாடநெறிகள் ஆரம்பமாகும் திகதி [ 06-06-1998 / 10-06-1998**

★ 98 A/L பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும் தயக்கம் இன்றி விண்ணப்பிக்கலாம். உங்களுக்கென விசேட பிரிவுகள் 05-09-1998 இல் ஆரம்பிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:**

1. IIS, 68, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
2. IIS, நாவலர் மடம், நெல்லியடி
3. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
4. JST ஸ்ரேசனரி, கண்டி வீதி, சாவகச்சேரி
5. மொடேர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி
6. வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை
7, கரன் புத்தக நிலையம், சுன்னாகம்

விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து ரூபா 200 பரீட்சைக்கட்டணத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். பரீட்சைக் கட்டணத்தைக் காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர் Director, Institute of Informatic Studies என்று பெயரிட்டுப் பணம் பெறும் நிலையம் Post office, Jaffna எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

Director, IIS,
68, Clock Tower Road, Jaffna.

(சி/3267)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 1-04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org